## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நியம இலக்கம் 17 இன் பிரகாரம் செயற்பாட்டுக் குத்தகைகளை கணக்கு வைக்கும் போது குத்தகைகள் செலுத்தி கணக்கு வைக்கப்பட வேண்டிய தகவல்கள் கணக்குகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 30 இன் பிரகாரம் நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானத்திற்கு தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய அனைத்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் தொடர்புகள் அவை நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்டாலும் இல்லா விட்டாலும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தின் ரூபா 5,670,876 பெறுமதியான நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக்கு குறிப்புக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் நடைமுறைப் பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளில் உள்ளடக்கப்படாத

ரூபா 774,540 தொகையான செலவு இவ் ஏற்பாட்டின் மூலம் செம்மையாக்கியதன் காரணமாக அந்த அளவினால் நட்டம் குறைவடைந்திருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்ட கட்டிடத்தின் வாடகையினை கணக்கு வைக்கும் போது 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 680,000 தொகையானது மீளாய்வாண்டிற்கான வாடகை வருமானமாக உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,520,000 தொகையான வாடகை வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரித்மா சபை கணக்குகளின் மூலம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட திரையரங்கின் குத்தகை வாடகை வருமானம் மற்றும் அதன் குத்தகை வாடகைச் செலவு ஒரே கணக்கில் காட்டப்படுவதன் மூலம் ரூபா 1,010,808 தொகையான வருமானம் மற்றும் ரூபா 926,574 தொகையான செலவுகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அட்டுறு வாடகையாகிய ரூபா 84,234 தொகை தொடர்பாக செம்மையாக்கல்கள் இடம் பெறாமையின் மூலம் அதே அளவினால் ஆண்டிற்கான நட்டம் குறைவடைந்திருந்தது.

(ஈ) இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபன கணக்கானது உள்ளக திணைக்கள கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்கின்ற நடைமுறைக் கணக்காக இருந்ததுடன் அதன் மீளாய்வாண்டிற்கான இறுதி மீதி ரூபா 84,071,406 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், இதற்குச் சமமாக இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தினால் பேணப்படுகின்ற திரைப்படங்களை பகிர்ந்தளித்தல் சபை கணக்கிற்கு அம் மீதி ரூபா 2,832,555 ஆக இருந்தது. அதற்கிணங்க உரிய நடைமுறைக் கணக்குகளை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்கான சம்பளத்திற்கு நேரொத்த வகையில் தயாரிக்கப்பட்ட பணிக் கொடைக்கான ஏற்பாட்டின் அளவில் முன்னைய ஆண்டிற்கான அளவாக ரூபா 1,227,777 தொகை முன் கொண்டுவரப்பட்ட நட்டத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தனால் அந்த அளவினால் முன்னைய ஆண்டிற்கான நட்டம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிழையாகச் செம்மையாக்கிய ரூபா 2,873,773 தொகையான பெறுமானத் தேய்விற்கான மிகையான

ஏற்பாட்டினை இந்த ஆண்டில் சரி செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளுக்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டிற்கான நட்டத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது.

(எ) இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படத்தின் காட்சிக் காலம் 6 மாதத்தினை மிகைத்ததன் பின்னர் அதன் இருப்பு பெறுமதி அற்றதான போதிலும் அவ்வாறு காலம் கடந்த திரைப்படத்திற்காக ரூபா 4,568,026 தொகை இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) வெளிநாட்டு ஓய்வு கூடச் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட வைப்பு ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் பரிமாற்றம் செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படாததன் காரணமாக ரூபா 217,880 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

திரையரங்கு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி பேரேட்டின் பிரகாரம் ரூபா 187,371,876 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 192,852,819 ஆக இருந்தனால் ரூபா 5,480,943 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.2.4.1 பெற வேண்டிய கணக்குகள்

**(அ) தயாரிப்புக் கடன்பட்டோர்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 91 மில்லியன் அளவான தயாரிப்புக் கடன்பட்டோரில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு ரூபா 50 மில்லியன் அல்லது 54% ஆக இருந்தது. இப் பணத்தினை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தயாரிப்புக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் வரவு மீதி ரூபா 89,116,396 ஆக இருந்ததுடன் அப் பெறுமதிக்கு திரைப்பட

வாடகை கடன்கொடுத்தோர் பட்டோலையிலுள்ள ரூபா 12,007,567 தொகையான வரவு மீதியும் நானாவித கடன்பட்டோர் பட்டோலையிலுள்ள ரூபா 3,022,409 தொகையான செலவு மீதியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் பணத்திற்காக அறவிட வேண்டிய வட்டி கடன்பட்டோருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு அந்த வட்டி 100% கிடைக்கவில்லை என்ற அடிப்படையில் 50% மாத்திரம் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மிகுதி 50% ஆன வட்டி ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டு அக் கணக்கின் செலவு மீதியாகிய ரூபா 2,965,479 தொகை தயாரிப்புக் கடன்பட்டோரிலிருந்து கழிக்கப்பட்டு தேறிய கடன்பட்டோர் பெறுமதியானது ரூபா 101,180,893 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) திரையரங்கு கடன்பட்டோர்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2001 ஆம் ஆண்டில் திரையரங்குகளுக்கு திரைப்படங்களை பகிர்ந்தளித்தலை தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு முன்னர் அதாவது தற்பொழுது மூடப்பட்டுள்ள 146 திரையரங்குகளிலிருந்து அறவிட வேண்டிய பணம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,913,163 ஆக இருந்தது.

(ii) தற்பொழுது செயற்பட்டு வரும் சபைகளுக்குச் சொந்தமான 177 திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 133,069,516 ஆக இருந்தது. அவ்வாறே 19 திரையரங்குகளுக்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய பணம் ரூபா 1,356,993 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவீடு செய்வதற்கும் செலுத்த வேண்டிய பணத்தினைச் செலுத்துவதற்குத் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய கடன்பட்டோர்**

----------------------------------

பதவியணியினரின் 3 நபர்களை சேவையிலிருந்து நீக்கும் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 134,001 தொகையான இழப்பீட்டுப்பணத்தினை 1997 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைப்பதற்கு அல்லது அதனைக் கணித்து

உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அறவிட முடியாக் கடன்களுக்கான ஏற்பாடு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரையரங்குகள் தயாரிப்பு, ஏனைய கடன் மற்றும் ஊழியர் முற்பணங்களாக ரூபா 262,982,226 கூட்டு மொத்தமான மொத்த கடன்களை அறவீடு செய்யப்பட வேண்டி இருந்தது. அக் கடன்பட்டோர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த அறவிட முடியாக் கடன் ஏற்பாடு ரூபா 73,274,300 ஆக இருந்தது. இதற்கிணங்க கூட்டுத்தாபனத்தின் கடன்பட்டோர் 27% ஆகிய மிகவும் உயர்ந்த சதவீதமான கடனை மீள அறவீடு செய்வதற்கு முடியாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(உ) தீர்த்துவைக்கப்படாத முற்பணக் கணக்குகளின் 19 விடயங்கள் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 359,041 ஆக இருந்தது.

### 1.2.4.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர்**

திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் பட்டோலையின் பிரகாரம் ரூபா 87,233,042 தொகையான செலவு மீதியில் ரூபா 31,147,340 தொகை அல்லது 36% 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதி என்பது அவதானிக்கப்பட்டது,

**(ஆ) ஏனைய கடன் கொடுத்தோர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 1,828,746 தொகையான நாணாவித கடன் கொடுத்தோர்களில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,121,213 தொகையான கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டதுடன் அவற்றினை பதிவழிப்பதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய கடன்கொடுத்தோர்களில் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 2,063,923 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள், கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு அனுப்பி வைக்காமையின் காரணமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர்களை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு முடியாதிருந்தது.

**(இ) திரைப்பட வாடகைக் கடன்கொடுத்தோர்**

திரைப்பட வாடகைக் கடன்கொடுத்தோர் கணக்கின் ரூபா 73,376,914 தொகையான கடன்கொடுத்தோர் மீதிக்கு திரைப்பட வழங்குனர்களுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் ரூபா 2,000,000 தொகையான மீதியினைச் சேர்த்து திரைப்பட வாடகை கடன்கொடுத்தோரின் பெறுமதியாகிய ரூபா 75,376,914 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீத வரிக்கான ஏற்பாடு, தயாரிப்பு கடன்வட்டிக்கான ஏற்பாடு, உரிமை கோரப்படாத சம்பளம் செலுத்த வேண்டிய புரள்வு வரி என்பன தொடர்பான ரூபா 82,772,745 தொகைக்கான மதிப்பீடு, கோவைகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெற வேண்டிய வருமாண வரிக் கணக்கில் ரூபா 2,615,507 தொகையான ஆரம்ப மீதி காணப்பட்டிருந்தும் அந்த மீதியினை வருமான வரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த மீதிகளின் சரியான தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 5(ஜீ) பிரிவு | திரைப்பட தயாரிப்புக்கு கடன் வழங்குதல் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்படக் கூடியதாக இருந்த போதிலும் திரைப்படங்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக திரைப்படங்களைத் தயாரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் எனும் பிரிவிற்காக நிதிகளை வழங்குதல் 1993 திசெம்பர் 27 ஆந் திகதிய 799/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தேறிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு காணப்பட்ட போதிலும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் திரையரங்குகளுக்காக ஒலி பொருத்தி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 14,916,770 தொகையும் இரண்டு திரையரங்குகளைப் புதுப்பிப்பதற்காக ரூபா 4,355,008 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(ஆ) ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிரூபம் | ரூபா 56,307,377 தொகையான முதலீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 6.1.5 ஆம் பிரிவு | உரிய நியமனம் / பதவியுயர்வு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்கியிருக்க வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் இலிகிதர் பதவிகளுக்கு 5 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நி.பி 177(i) | சேகரிக்கப்படும் அரசாங்க பணங்கள் நாளாந்தம் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் தங்களுக்கு கிடைக்கும் |

அனைத்து பணமும் நாளாந்தம் அனுப்பி வைக்கப்பட்டு அப் பணத்திற்குரிய பணச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் திரையரங்கினால் சேகரிக்கப்பட்ட ரூபா 318,182 தொகையான வருமானம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 371 — முற்பணம் ஒன்று அது வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டும் எனினும், 1 இலிருந்து 11 ஆண்டுகள் வரையான கால வீச்சில் ரூபா 1,338,386 தொகையான முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி 756 — பொருட்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே மெய்மையாய்வு அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், திரையரங்கின் அவ்வாறான நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபம்

(i) 9.2 (டீ) பிரிவு — அமைப்பு வரைபடம் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 72,582,062 தொகையான வரிக்கு முன்னைய தேறிய நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னைய தேறிய நட்டம் ரூபா 74,215,601 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 75,000,000 படியாக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீண்டுவரும் மானியத்தினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ள மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான இலாபம் முறையே ரூபா 2,417,938 மற்றும் ரூபா 784,398 ஆக இருந்தன.

(ஆ) 2006 ஆம் ஆண்டில் ரூபா 51 மில்லியன் நட்டம் ஈட்டப்பட்டிருந்ததுடன் அது 2011 ஆம் ஆண்டளவில் அது 73 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டு வரை திரண்ட நிதி மறை மீதியினைக் கொண்டிருந்தும் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 115,153,399 பெறுமதிக்கு சொத்துக்கள் மீள் மதிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அன்றிலிருந்து திரண்ட நிதியத்தால் சாதகமான மீதி காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### (அ) திரைப்படக் கடன்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் போது 12 திரைப்படங்களுக்காக திரைப்படச் சேவைக் கடனாக ரூபா 3,020,629 தொகையும் 5 திரைப்படங்களுக்கு பிரதி செய்யும் நடவடிக்கைகளுக்காக ரூபா 6,255,756 தொகையான கடன் தொகையும் 5 திரைப்படங்களுக்கு திரைப்படத் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 5,409,072 கடன் தொகையுமாக ரூபா 14,685,457 கூட்டு மொத்ததொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஆண்டின் போது இரண்டு திரைப்படங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,532,664 கடன் பணம் மாத்திரம் மீள அறவிடப்பட்டிருந்தன. திரைப்படத் தயாரிப்பு பூர்த்தியடைந்து காட்சிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டதன் பின்னரே பணத்தினை அறவிடக் கூடியதாக இருக்கும் என தலைவர் தெரிவித்திருந்தார்.

(ii) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 7,845,494 தொகையான திரைப்படத் தயாரிப்புக் கடனைப் பெற்றுக் கொண்ட 07 திரைப்படங்களும் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 2,298,016 தொகையான திரைப்படத் தயாரிப்புக் கடனைப் பெற்றுக்கொண்ட 04 திரைப்படங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரை திரையிடப்பட்டிருக்கவில்லை.

(iii) காட்சிப்படுத்துவதற்காக முன் வைக்கப்படாத 26 திரைப்படங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 4,229,646 தொகையான கடன் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட முடியாதிருந்தது.

(iv) காட்சிப்படுத்துவதற்காக முன்வைக்கப்படாத 24 திரைப்படங்களுக்காக வழங்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான கடனின் அளவு ரூபா 24,121,780 ஆக இருந்தது.

(v) காட்சிப்படுத்துவதற்காக விடுவிக்கப்பட்ட 45 திரைப்படங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 23,913,254 தொகையான கடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட முடியாதிருந்தது.

**(ஆ) திரையரங்குகளுக்காக கடன் வழங்குதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது ரூபா 1,100,000 தொகை திரையரங்கிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது அப் பணத்தினை மீளச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 131,957 அறவிடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் 06 திரையரங்குகளுக்காக ரூபா 4,748,294 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அத் திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 3,334,840 ஆக இருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது 05 திரையரங்குகளிலிருந்து ரூபா 716,668 தொகை கிடைத்திருந்ததுடன் ஒரு திரையரங்கிலிருந்து எப் பணமும் கிடைத்திருக்கவில்லை.

**(இ) திரைப்படங்களை இறக்குமதி செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டிணைந்த திட்டத்தின் 3.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் திரைப்படங்களை இறக்குமதி செய்யும் போது சர்வதேச ரீதியாக

கௌரவம் பெற்ற கௌரவத் திரைப்படங்களையும் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள் கல்வி சார் / உயர் தரத்தினைக் கொண்ட திரைப்படங்களாக வகைப்படுத்தப்பட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட 71 திரைப்படங்களில் 31 திரைப்படங்கள் வயது வந்தவர்களுக்கு மாத்திரம் மற்றும் வயது வந்தவர்களுக்கு மிகவும் பொருத்தமானது என கணிக்கைச் சபையினால் வகைப்படுத்தப்படுகின்ற திரைப்படங்களாகும்.

(ii) கூட்டிணைந்த திட்டத்தின் 3.4.3 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமும் தனியார் துறைக்கு போட்டியாக திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்காக செயற்பாடாக மத்தியஸ்தம் செய்தல் வேண்டும். 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் தனியார் துறையினரால் 2011 ஆண்டிற்கு 125 திரைப்படங்களை இறக்குமதி செய்திருந்த அதே வேளை கூட்டுத்தாபனத்தினால் ஒரு திரைப்படமும் இறக்குமதி செய்திருக்கவில்லை.

(iii) திரைப்படங்களை இறக்குமதி செய்வது சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டிற்கான நிபந்தனைத் தொடரின் பிரகாரம் அறவிடப்பட்ட சில கட்டணங்கள் 2006 ஆம் ஆண்டிற்கான நிபந்தனைத் தொடரினை விட மிகவும் குறைந்ததாக இருந்ததுடன் அதிகரிக்கப்பட்ட கட்டணம் மிகவும் குறைந்த தொகையினால் மாத்திரம் வேறுபட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பரிசோதனைப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 384,265 பெறுமதியான 78 வரவுத் தாள்கள் வழங்கப்பட்டிருந்தும் 54 வரவுத்தாள்களிலிருந்து ரூபா 211,585 மாத்திரம் கிடைத்திருந்தது

(ஆ) 2003 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திரையரங்கு 2008 ஆம் ஆண்டின் போது கூட்டத்திற்கு முரணாக வகையிலும் குத்தகை உடன்படிக்கையின் 3(ஆ)

பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திரையரங்கின் நிர்வாகத்தினை வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டிற்கான நிர்வாகக் கட்டணமும் அதன் மதுபானக் கடையின் வாடகை வருமானமும் கணக்கீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் ஆரம்பத்திலிருந்து 2007 மார்ச் வரையும் அதன் மேற்பார்வை நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களினால் ரூபா 471,257 தொகைக வருமானமாக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அப் பணத்தினை 2012 ஆகஸ்ட் வரை கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் முயற்சி எடுத்திருக்கவில்லை.

(ஈ) குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட திரையரங்கு 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்காக திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 114,044 தொகையினை ஏற்பாடு செய்து இனங்காணக்கூடிய வகையில் கணக்கு வைக்காதிருந்ததுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்கான முயற்சி எடுத்திருக்கவில்லை.

(உ) உரிய திகதியில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படாத திரைப்பட வாடகை மற்றும் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பிற்காக அறவிடப்படும் 2.5% ஆன வீதவரி இலாப நட்டக் கணக்கில் வீதவரி வருமானமாக ரூபா 3,065,482 தொகை காட்டப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது எதுவித வீத வரியும் வருமானமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. இந்த வருமானத்திற்கான கணக்குகளில் காட்டுவதனால் ஆண்டிற்கான நட்டம் ரூபா 3,065,482 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3.3 குறைந்த அசைவுள்ள பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரையரங்கில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அசைவற்று / குறைந்த அசைவுள்ள மீதிகளாக காட்டப்பட்டுள்ள 523 ஆகும். அவற்றில் 428 பொருட்களுக்குரிய அலகுகளின் எண்ணிக்கை 5060 ஆக இருந்ததுடன் இப் பொருட்களின் பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. 95 வகையான

பொருட்களுக்குரிய அலகுகளின் எண்ணிக்கை 610 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 112,310 ஆகும்.

(ஆ) ரூபா 29,329,517 பெறுமதியான 14 நிலையான சொத்துக்கள் 16 ஆண்டுகளிலிருந்து 27 ஆண்டுகள் வரையான கால வீச்சில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

திரைப்படக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த ஒரு திரைப்படத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 8,597,915 ஆக இருந்ததுடன் உழைத்த வருமானம் ரூபா 4,631,721 ஆக இருந்ததனால் ரூபா 3,966,193 தொகையான நட்டம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

கூட்டுத்தாபனத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 43,832,995 பெறுமதியான 06 நிர்மாண ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தங்களில் 05 ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு ஒப்பந்தத்தினைத் தவிர்த்து ஏனைய ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் போது அந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 12,074,002 ஆக இருந்தது. ஏனைய ஒப்பந்தங்களிலும் மீளாய்வாண்டில் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒரு ஒப்பந்தத்திலிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்பட்டமை காட்டப்பட்டிருந்தும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணியினரில் 17 நிறைவேற்றுத்தர பதவிகளும் உதவிச் சேவைகளில் 15 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் சிறிய மற்றும் ஏனைய சேவைகளில் உத்தியோகத்தர்களின் மிகைகள் முறையே 09 மற்றும் 11 ஆக இருந்தன.

(ஆ) அங்கீகரிக்கப்படாத பிரிவுத் தலைவர் பதவிக்காக எம்ஏ 2 சம்பளத் தொகுதியிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு திரைக் கூடத்தின் அனைத்து நடவடிக்கைகளினதும் முழுமையான மேற்பார்வை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## 3.7 வாகனப் பயன்பாடு

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகன குழாமில் 09 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 02 ஒதுக்கப்பட்ட வாகனங்களாகும். 2011 ஆம் ஆண்டின் போது அவ் வாகனங்கள் பயணம் செய்த மொத்த துாரம் 212,851 கிலோ மீற்றர்களாக இருந்ததுடன் பராமரிப்புச் செலவு ரூபா 2,398,208 ஆகவும் எரிபொருள் செலவு ரூபா 2,070,606 ஆகவும் இருந்தன. அதற்கிணங்க ஒரு கிலோ மீற்றருக்காக மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவு முறையே ரூபா 11 மற்றும் ரூபா 10 ஆக இருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான கூட்டினைந்த திட்டம் திருத்தம்/ நாளது வரையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. 2007–2011 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டினைந்த திட்டம் 2011 ஆம் ஆண்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கூட்டுத்தாபனத்தினால் இரண்டு இந்தியக் கூட்டுத் திரைப்படங்கள் ஒரு சீன கூட்டுத் திரைப்படம் மற்றும் ஒரு சிறுவர் திரைப்படத்தினை தயாரித்தல படப்பிடிப்பு உபகரணம் மற்றும் மேம்படுத்தப்பட்ட காட்சி நாடாவினை வழங்குதல்

(ii) கூட்டுத்தாபனத்தில் அனைத்து வசதிகளுடனான ஊடகப் பிரிவினை உருவாக்குதல்

(iii) கூட்டுத்தாபனத்தின் நிர்வாக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக அனைத்து பிரிவுகளையும்

உள்ளடக்கும் வகையில் கணனி வலையமைப்பினையும் தகவல் முறைமையினையும் உருவாக்குதல்

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈஏ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தில் பேணப்படும வளங்களையும் கூட்டுத்தாபனத்தின் பதவியினரையும் உள்ளடக்கும் வகையில் முறைப்படியாகத் தயாரிக்கப்பட்ட பதவியணியினர் திட்டமும், செயலாற்றல் குறிகாட்டியும் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளடக்கும் காலத்தில் உரிய இலக்குகளை அடைந்து கொள்ளல் மற்றும் திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினை காலரீதியாக மீளாய்வு செய்தல் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி 2001 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதனைப் பயனுறுதியான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு போதியளவு பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் / செலவுகளையும் உள்ளபடியான வருமானம் / செலவுகளையும் ஒப்பீடு செய்த போது 26 வருமானம் / செலவுத் தொகுதிகள் தொடர்பாக 50% இற்கு மேற்பட்ட முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஆ) தனிப்பட்ட கோவைகளைப் பேணுதல்

(இ) முதலீடு

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள்

(ஊ) வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல்

(எ) கூட்டிணைந்த திட்டம்

(ஏ) திரையரங்கு வருமானம்

(ஐ) பேரேட்டுக் கணக்குகள்